மதுரமுரளி

Rs. 5/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

Regd. No.
TN / PMG (CCR) / 521 / 03 - 05

Licensed to Post without
prepayment WPP No. 319 / 03-05

வேணு : 10 | டிசம்பர் - 2004 | கானம் : 5




மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதன்


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 83. ✆ 2371 0110 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org; e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org


ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை





வேணு : 10 | டிசம்பர் - 2004 | கானம் : 5

www.madhuramurali.org



மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள்



வம்சீதரன்

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 10 டிசம்பர் 2004 கானம் : 5

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பன்னிரு நாமப் பாட்டு | 2 |
| 2. | எந்தரோ மஹானுபாவுலு - 80 | 4 |
| 3. | ஸ்ரீ யோகிராம்சுரத்குமார் | 8 |
| 4. | குருவருளும் திருவருளும் | 12 |
| 5. | மாலே மணிவண்ணா - 27 | 15 |
| 6. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 27 | 21 |
| 7. | எது ப்ரவசனம் | 24 |
| 8. | பக்தி | 25 |
| 9. | வழிபாடு | 27 |


Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhuramurali" every month in English / Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamiji's lectures / essays
5. Articles on religion, philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas and more.

ஸ்ரீ ஹரி:

# பன்னிரு நாமப்பாட்டு

ஸ்ரீ நம்மாழ்வார் திருவாய்மொழி 2 ஆம் பத்து 7வது பாசுரம்,

பண் : தக்கராகம் தாளம் : ஏழொத்து,

*கேசவன் தமர் கீழ் மேல் எமர் ஏழ் எழு பிறப்பும்;*
*மாசதிர் இதுபெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா! -*
*ஈசன், என் கருமாணிக்கம், என் செங்கோலக்கண்ணன், விண்ணோர் -*
*நாயகன், எம்பிரான், எம்மான் நாராயணனாலே* 1

*நாரணன், முழு ஏழ் உலகுக்கும் நாதன்; வேத மயன்;*
*காரணம், கிரிசை, கருமம் இவை முதல்வன்; எந்தை;*
*சீர் அணங்கு அமரர் பிறர் பலரும் தொழுது ஏத்த நின்று*
*வாரணத்தை மருப்பு ஒசித்த பிரான்; என் மாதவனே.* 2

*மாதவன் என்றதே கொண்டு, என்னை இனி இப்பால் பட்டது*
*யாது அவங்களும் சேர் கொடேன் என்று என்னுள் புகுந்து இருந்து,*
*தீது அவம் கெடுக்கும் அமுதம்; செந்தாமரைக்கண் - குன்றம்;*
*கோதுஅவம்இல் என்கன்னல் - கட்டி; எம்மான்; என் கோவிந்தனே.* 3

*கோவிந்தன், குடக்கூத்தன், கோவலன் என்று என்றே குனித்துத்*
*தேவும் தன்னையும் பாடிஆடத் திருத்தி, என்னைக் கொண்டு, என்*
*பாவம் - தன்னையும் பாறக் கைத்து, எமர் ஏழ் எழு பிறப்பும்*
*மேவும் தன்மையம் ஆக்கினான்; வல்லன் எம்பிரான் விட்டுவே.* 4

*விட்டு இலங்கு செஞ்சோதித் தாமரை பாதம், கைகள், கண்கள்,*
*விட்டு இலங்கு கருஞ்சுடர் - மலையே திரு உடம்பு;*
*விட்டு இலங்கு மதியம் சீர் சங்கு; சக்கரம் பரிதி;*
*விட்டு இலங்கு முடி அம்மான் மதுசூதனன் - தனக்கே.* 5

*மதுசூதனை அன்றி மற்று இலேன் என்று எத்தாலும் கருமம் இன்றி,*
*துதி சூழ்ந்த பாடல்கள் பாடி ஆட நின்று, ஊழிஊழிதொறும்*
*எதிர்சூழல் புக்கு, எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய*
*விதி சூழ்ந்ததால், எனக்கேல் அம்மான் திரிவிக்கிரமனையே.* 6

*திரி விக்கிரமன், செந்தாமரைக்கண் எம்மான், என் செங்கனிவாய்*
*உருவில் - பொலிந்த வெள்ளைப் பளிங்கு நிறத்தனன் என்று*
*என்று உள்ளி,*
*பரவிப் பணிந்து பல் ஊழி ஊழி நின் பாத பங்கயமே*
*மருவித் தொழும் மனமே தந்தாய்; வல்லைகாண், ஏன் வாமனனே. 7*

*வாமனன்! என் மரகத வண்ணன்! தாமரைக் கண்ணினன் !*
*காமனைப் பயந்தாய்! என்று என்று உன் கழல் பாடியே பணிந்து,*
*தூ மனத்தனனாய்ப் பிறவித்துழதி நீங்க, என்னைத்*
*தீ மனம் கெடுத்தாய்; உனக்கு என் செய்கேன்? என் சிரீதரனே. 8*

*சிரீதரன், செய்ய தாமரைக்கண்ணன் என்று என்று, இராப்பகல்*
*வெரீஇ, அலமந்து கண்கள் நீர் மல்கி, வெவ்வுயிர்த்து உயிர்த்து,*
*மரீஇய தீவினை மாள, இன்பம் வளர, வைகல் வைகல்*
*இரீஇ, உன்னை என்னுள் வைத்தனை; என் இருடீ கேசனே! 9*

*இருடீகேசன், எம்பிரான், இலங்கை அரக்கர் குலம்*
*முருடு தீர்த்த பிரான், எம்மான், அமரர் பெம்மான் என்று என்று*
*தெருடியாகில், நெஞ்சே! வணங்கு; திண்ணம் அறி; அறிந்து,*
*மருடியேலும் விடேல் கண்டாய்! நம்பி-பற்பநாபனையே. 10*

*பற்பநாபன்; உயர்வு அறஉயரும் பெருந்திறலோன்;*
*எற்பரன்; என்னை ஆக்கிக் கொண்டு, எனக்கே தன்னைத் தந்த*
*கற்பகம்; என் அமுதம்; கார்முகில் போலும் வேங்கடநல்*
*வெற்பன்; விசும்போர்பிரான்; எந்தைதாமோதரனே. 11*

*தாமோதரனை, தனி முதல்வனை, ஞாலம் உண்டவனை*
*ஆமோதரம் அறிய ஒருவர்க்கு? என்றே தொழும் அவர்கள்*
*தாமோதரன் உரு ஆகிய சிவற்கும் திசைமுகற்கும்*
*ஆமோ தரம் அறிய - எம்மானை என் ஆழி வண்ணனையே. 12*

*வண்ண மாமணிச் சோதியை, அமரர் தலைமகனை,*
*கண்ணனை, நெடுமாலைத் தென் குருகூர்ச் சடகோபன்*
*பண்ணிய தமிழ்-மாலை ஆயிரத்துள் இவை பன்னிரண்டும்*
*பண்ணில் பன்னிரு நாமப்பாட்டு அண்ணல்-தாள் அணைவிக்குமே. 13*

# எந்தரோ மஹானுபாவுலு - 80

ஸன்யாஸம் என்றால் நெருப்பைப் போன்ற வாழ்வு வாழ்தலே ஆகும். தனது பழைய வாழ்க்கையைச் சேர்ந்த அனைத்து விஷயங்களையும் ஞான அக்னியால் பொசுக்கிவிட்டு, தானே அக்னியைப் போல் ஜொலிக்கவேண்டும். இந்த வ்ரதத்தின் நோக்கம் இதுதான். உலக விஷயங்களை அடியோடு துறந்து அனைத்து ஜீவன்களிடமும் நட்புறவு பூண்டு உலக உறவுகளையும், சம்மானங்களையும் துறந்து இறைவனது நாமநிஷ்டையும், வைராக்யத்துடனும் கூடிய வாழ்வே சன்யாஸ வாழ்க்கை. ஸத்வகுண ஸ்வரூபமான வெள்ளை வஸ்திரத்தையும் துறந்து, சத்வ, ரஜ, தம குணங்களையும் கடந்து, மஹா ஸத்வ ரூபத்திலும், குணத்திலும் எந்நேரமும் ஸ்திரமாக இருக்கவேண்டிய ஸன்யாஸிக்கு அதனால்தான் அக்னி வர்ணமான ஸன்யாஸ வஸ்த்ரம் தரப்படுகிறது. அவன் நாராயணனைத் தவிர வேறு யாரையும் பார்க்கவோ நினைக்கவோ கூடாது. அதனால்தான் ஒரு ஸன்யாஸி, தனது பூர்வாஸ்ரம பெயரைக்கூட துறந்துவிட்டு குருவின் மூலம் பெற்ற ஸன்யாஸ நாமத்தை ஏற்கிறான். உண்மையில் ஒரு ஸன்யாஸி நாம ரூபங்களைக் கடந்தவன் ஆகிறான்.

மஹாப்ரபு, க்ஷவரம் முடிந்து, பூணூலை அவிழ்த்து, அருகிலிருந்த நதியின் குளிர்ந்த நீரில் மூழ்கிக் குளித்தார். வஸ்திரம் அணிந்துகொண்டு, யாக வேதிக்கருகில் வந்தார். கைகுவித்துக் கொண்டு கேசவபாரதிஜியின் முன்பு அமர்ந்தார். ஸன்யாஸ ஹோமங்கள் முடிந்து, பாரதிஜி, ப்ரபுவை தன் அருகில் அமருமாறு அழைத்தார். ஸன்யாஸ மந்திரமளிக்க மறுபடி பாரதிஜி சிறது தயக்கம் காட்ட, மஹாப்ரபு உத்ஸாகமாக,''பகவான்! ஸன்யாஸ மந்திரத்தை அனைவர் முன்னிலையிலும் உரக்கக் கூறக்கூடாது என கேள்விப்பட்டிருக்கிறேனே'' என்றார்.

பாரதிஜி, 'ஆமாம்! ஸன்யாஸ மந்திரம் மிகவும் ரஹஸ்யமானது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. குருமார்களைத்தவிர மற்றவர்முன் அதைக்கூறக்கூடாது' என்றார்.

ப்ரபு உடனே, 'எனக்கு உங்களிடம் ஒன்று கூறவேண்டும். அது மிகவும் ரஹஸ்யமானது. எனவே உங்கள் காதிலே கூறுகிறேன்' என்றார்.

பாரதிஜி, தனது வலது காதை ப்ரபுவை நோக்கிக் காட்டி 'அவச்யம் கூறு! என்ன விஷயம்?' என்றார். ப்ரபு, பாரதியின் காதில் கூறலானார். 'ஒருநாள் என் கனவில் ஒரு ப்ராஹ்மணர் தோன்றினார். அவரும் ஸன்யாஸி. அவரது ரூபம் உங்களுடன் ஒத்ததாக இருந்தது. கனவிலேயே அவர் என்னை ஸன்யாஸியாகுமாறு பணித்தார். பிறகு அவரே என் காதில் ஸன்யாஸ மந்திரமும் கூறினார். அது எனக்கு இன்றும் நன்றாக நினைவிருக்கிறது. அதைக் கூறுகிறேன் கேளுங்கள். சரியா, தவறா என்று சொல்லுங்கள்' என்று சொல்லிவிட்டு, தனக்கு கனவில் கிடைத்த மந்திரத்தை, பாரதிஜியிடம் கூறினார். ப்ரபுவின் வாயிலிருந்து சுத்தமாக ஸன்யாஸ மந்திரத்தைக் கேட்ட பாரதிஜி ஆச்சரியமடைந்து தழுதழுத்த குரலில், 'உனக்கு க்ருஷ்ணப்ரேமை கிடைத்துவிட்டது. வருங்கால நிகழ்வுகள் உனக்குத் தெளிவாகத் தெரிகிறது. க்ருஷ்ணப்ரேமையே எல்லாவற்றின் ஸாரம். ஜபம், தபம், பூஜை, பாடம், வானப்ரஸ்தம், ஸன்யாஸம் போன்ற தர்மங்கள் க்ருஷ்ணப்ராப்திக்குத்தானே! க்ருஷ்ணப்ரேமை கிடைத்த ஒருவனுக்கு மந்திரம் ஏற்பது, தீக்ஷை ஏற்பது எல்லாம் உலகத்திற்காகத்தான். நீயும் ஒரு மரியாதைக்காக உலகத்திற்கு உதாரணமாக இருக்கத்தான் இப்படி ஸன்யாஸம் ஏற்கிறாய் என்று எனக்கு நன்றாகத் தெரியும். க்ருஷ்ண கீர்த்தனம், நீ வீட்டிலேயே செய்யலாம். இருந்தாலும் உலகத்திற்காக நீ க்ருஹத்தை துறந்து, கர்மங்களைத் துறந்து, கடினமான ஸன்யாஸ ஆச்ரமத்தை ஏற்கிறாய். இப்படி உனது எல்லாக் காரியங்களும் உலகிற்கு பாடமளிக்கத்தான்' என்று கூறி விட்டு, ப்ரபுவிற்கு மந்திர தீக்ஷை அளிக்கத் தயாரானார்.

ஒரு சிறிய வஸ்திரத்தால், மூடிக்கொண்டு ப்ரபுவின் காதில் ஸன்யாஸ மந்திரத்தை ஓதினார். அதைக் கேட்டதுமே ப்ரபு மூர்ச்சையாகி பூமியில் விழுந்தார். ஹா க்ருஷ்ணா! ஹா க்ருஷ்ணா! என்று உரத்த குரலில் கூவிக்கொண்டே அழலானார். அருகில் அமர்ந்திருந்த நித்யானந்தர், அவரை சமாதானப்படுத்தி ப்ரக்ஞைக்கு கொண்டுவர முயற்சித்தார்.

பாரதிஜி, ப்ரபுவின் வெள்ளை வஸ்திரங்களைக் களைந்து, அவருக்கு காஷாய வஸ்திரங்களை அணியக் கொடுத்தார். ஒரு வெளி வஸ்திரம் (போர்த்திக் கொள்வதற்கு) இரண்டு கௌபீனங்கள், ஒரு பிக்ஷா பாத்திரம், ஒரு கந்தை, ஒரு இடுப்பு வஸ்திரம் ஆகியவற்றை ப்ரபுவிற்குத் தந்தார். ரத்த வர்ண காஷாய உடையில், ப்ரபு உதிக்கும் செங்கதிரவன்போல் ஜொலித்தார்.

காஷாய உடையுடனும், கையில் தண்டத்துடனும், ''ஸ்ரீ க்ருஷ்ணா ஸ்ரீ க்ருஷ்ணா!'' என்று கூறிக்கொண்டு ப்ரபு, கண்ணீர் பெருக நின்றுகொண்டிருந்தார். மஹாப்ரபுவின் இந்த சுந்தர ரூபத்தைக் கண்டு, அங்கிருந்தவர்கள் பேச்சடைத்துப் போனார்கள். அனைவரது மனமும் இந்த அத்புத ரூபத்தைக்கண்டு ப்ரேமையுடன் துள்ளிக் குதித்தது. அனைவரது கண்களிலும், ப்ரேமைதான் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. ப்ரபுவும், தலைகுனிந்து நின்றுகொண்டிருந்தார். அப்போது அங்கு யாராவது மூச்சுவிட்டால்கூட கேட்கும்படியான நிசப்தம் நிலவியது. பக்ஷிகள் கூட சப்திக்கவில்லை. காற்றும் வீசுவதை மறந்து மஹாப்ரபுவை ஸ்பர்சித்து மகிழ்ந்தது.

பாரதிஜி, ப்ரபுவிற்கு என்ன ஸன்யாஸ நாமம் அளிக்கலாம்? என யோசித்தார். தனது மிகப்பிரியமான சிஷ்யனுக்கு, அவனது இயற்கைக்கு ஏற்ற அர்த்தமுள்ள பெயரை இடவேண்டும் என எண்ணினார். அப்பொழுது, சாக்ஷாத் சரஸ்வதி தேவியே அவருக்கு உதவ நினைத்தாள் போலும்! இவன் க்ருஷ்ண பக்தி இல்லாத ஜீவன்களுக்கு சைதன்யத்தை அளிக்கப் போகிறான். எந்த ஜீவன்களுக்கு க்ருஷ்ண பக்தி இல்லையோ, அவன் ஜட வஸ்துதான். இவன் பகவன் நாமத்தினால் ஜட வஸ்துக்களுக்கு உயிரோட்டம் அளிக்கிறான். எனவே இவனுக்கு, 'ஸ்ரீ க்ருஷ்ணசைதன்யர்' என்ற நாமம் பொருத்தமாக இருக்கும் என அவருக்குத் தோன்றியது.

உடனே அவருக்கு ஆனந்தமும் ஏற்பட்டது. அந்த நிசப்தத்தைக் கலைக்கும் வகையில் பேசலானார். 'இவர் ஸ்ரீ க்ருஷ்ணனின் மதுரமான நாமங்களால் உலகில் சைதன்யத்தைப் பரப்புகிறார். இனியும் அதையே செய்யப்போகிறார். எனவே இவருக்கு 'ஸ்ரீ க்ருஷ்ணசைதன்யர்' என்ற பெயரை அளிக்கிறேன். பாரதி என்பது எங்கள் குரு பரம்பரையின் அடைமொழி. எனவே இவர்

இனி 'ஸ்ரீ க்ருஷ்ண சைதன்ய பாரதி' என அழைக்கப்படுவார்' என்று கேசவபாரதிஜி கூறியதும், மஹாப்ரபு **பா**வ ஆவேசம் ஏற்பட்டு, 'நான் என் ப்ரியனான ஸ்ரீ க்ருஷ்ணனை சந்திக்க ப்ருந்தாவனம் செல்கிறேன்' என்று ஓட ஆரம்பித்தார். ஹரி! ஹரி! என்று கூறிக்கொண்டே ஓடும் மஹாப்ரபுவைக் கண்ட பக்தர்கள் முன்னே சென்று வழி மறித்தனர். வழியடைத்துக்கொண்டு நிற்கும் ஜனங்களைப் பார்த்து, ப்ரபு அழுதுகொண்டே, 'சகோதரர்களே! நீங்கள் எனக்கு ஸ்ரீ ப்ருந்தாவனத்திற்கு வழி காட்டுங்கள். என் ப்ரியனான கண்ணனின் தர்சனத்திற்காக நான் ஏங்கித் தவிக்கிறேன். க்ருஷ்ண தர்சனம் ஏற்படும் வரை எனக்கு சாந்தி ஏற்படாது. தயவு செய்து வழியை விட்டு விலகுங்கள். எனது உயிரான ப்ரியனை நான் அடையவேண்டும் என ஆசீர்வாதம் செய்யுங்கள்' என வேண்டிக் கொண்டார்.

நித்யானந்தர் கூறினார், ''ப்ரபு! நீங்கள் முதலில் பரம பூஜ்யரான குருதேவரின் சரணங்களில் நமஸ்காரம் செய்யுங்கள். அவர் என்ன கூறுகிறாரோ, அதுபோல் செய்யுங்கள். குருவின் ஆக்ஞையின்றி எந்த செயலும் செய்வது சரியாக இருக்காது'' என்றார்.

இதைக் கேட்ட ப்ரபு, சிறிது யோசித்து பதிலேதும் கூறாமல் ஆச்ரமத்திற்குள் நுழைந்தார். அனைவரும் ப்ரபுவைப் பின்பற்றி வந்தனர். ஆச்ரமத்திற்குள் வந்த ப்ரபு, தண்டி சன்யாஸிகளின் வழக்கப்படி தமது குருதேவரின் சரணங்களில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். குருவின் ஆணைப்படி அவர் அன்று இரவு அங்கேயே குரு ஸேவை செய்துகொண்டு கழித்தார். அன்று இரவையும் ப்ரபு க்ருஷ்ண சங்கீர்த்தனத்தில் கழித்தார்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥

# ஸ்ரீ யோகிராம்சுரத்குமார்

**- ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

பகவானுடைய அவதாரங்களையும், எத்தனையோ ஞானிகளையும், சித்தர்களையும், யோகிகளையும் கண்டது நம்முடைய தேசம்; அத்தகைய மஹான்களின் சரித்திரங்களைப் படிக்கும்பொழுது, அவர்கள் தங்களை அண்டிய பக்தர்களைக் காக்கும் பொருட்டு, பலவிதமான அற்புதங்களை நடத்தியுள்ளார்கள் என்று படிக்கின்றோம். அவற்றையெல்லாம் படிக்கும்பொழுது, பலருக்கு இதெல்லாம் கட்டுக் கதையாக இருக்குமோ என்று தோன்றும், யாராவது அவர்கள் மீது அன்புள்ளவர், ஒன்றுக்கு இரண்டாக நடந்ததையும் நடக்காததையும் சேர்த்து எழுதி விட்டார்களோ என்று கூட நினைக்கத் தோன்றும். மஹான்களிடம் நம்பிக்கை உள்ளவர்களுக்கும் கூட, ஏன் இத்தகைய மஹான்கள் நாம் வாழக்கூடிய காலத்திலே இல்லையே என்ற எண்ணம் ஏற்படும். அப்படிப்பட்டவர்களும் அதிசயிக்கத்தக்கும்படி ஒரு மஹாத்மா நம்முடைய காலத்திலே வாழ்ந்தார். ஞான தபோதனர்களை 'வா' என்று அழைக்கும் மலையான திருவண்ணாமலையில், பல பிறவிகள் எடுத்துக் கடுமையான தவம் இயற்றினாலும், அடைய முடியாத முக்தியை, நினைத்த மாத்திரத்தில் கொடுக்கக் கூடிய திருவண்ணாமலையில் வாழ்ந்து வந்தார். அவர்தான் யோகிராம் சுரத்குமார்.

வேடனாக இருந்த வால்மீகிக்கு 'ராம ராம' என்ற மந்திரத்தை நாரதர் உபதேசம் செய்ய, அவருக்கு, 'ராம ராம' என்று சொல்ல வராததால், வேடனுக்குச் சுலபமாக வரக்கூடிய 'மர மர' என்று சொல்லிக் கொடுக்க, அதுவே 'ராம ராம' என்ற மந்திரமாக ஆகி, உயர்ந்த காவியத்தை எழுதினார். ஆண் பறவையும், பெண் பறவையும் சேர்ந்திருக்கக் கூடிய காலத்தில், ஒரு வேடன் அதை அடிக்க, அதைப் பார்த்து தாங்க முடியாமல் தவித்தார் வால்மீகி. அப்படித் தவித்த அவருடைய வாயிலிருந்து, தானாக ராமாயணம் வர ஆரம்பித்துவிட்டது. வேடனாக இருந்த வால்மீகி நாரத

மஹரிஷியால் ராம நாமம் உபதேசம் செய்யப்பட்ட பெருமையினால் இருபத்து நான்காயிரம் செய்யுள்கள் உடைய வால்மீகி ராமாயணம் எழுதிவிட்டார். ஒரு பறவை அடிபட்டது. எப்படி வால்மீகியினுடைய வாழ்க்கையை மாற்றிவிட்டது பார்த்தீர்களா? அதுபோல், இந்த மஹாத்மாவினுடைய வாழ்க்கையையும் ஒரு பறவை மாற்றிவிட்டது.

முக்தி தரும் நகரங்களில் மிகவும் முக்கியமானதும், தலையானதும் ஆன காசி நகரத்தில் சமீபத்தில் இந்த மஹாத்மா அவதாரம் செய்தார். இவர் சிறு குழந்தையாக இருக்கும்பொழுது, கிணற்றிலிருந்து நீர் இறைக்கும்பொழுது, அந்தச் சகடையில் ஒரு பறவை மாட்டிக் கொண்டு உயிர்விட்டது. அந்த நிகழ்ச்சி அவருடைய மனதை என்னவோ செய்தது. அது அவருடைய வாழ்க்கையையே மாற்றிவிட்டது.

இப்பொழுது எல்லோரும் தேசிய ஒற்றுமையினுடைய அவசியத்தைப் பற்றி எழுதியும், பேசியும் வருகின்றோம். ஆனால், இந்த தேசிய ஒற்றுமை கூட உண்மையில் ஆன்மீகத்தினால்தான் ஏற்படுகின்றன. அதிலும் கூட உண்மையில் மஹான்களால்தான் ஏற்படுகிறது. தென் இந்தியாவில் வசிக்கக் கூடிய நாம் நம்முடைய பிறவியில் ஒரு முறையாவது காசி சென்று கங்கையில் நீராட வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். இங்கிருந்து கேதார்நாத் பத்ரிநாத் என்று இமயமலையில் எல்லைக்குச் செல்கின்றோம். காஷ்மீரில் எல்லையில் உள்ள வைஷ்ணவிக்குச் செல்வதற்கு ஆசைப்படுகின்றோம். ஆனால், வட இந்தியாவில் உள்ளவர்கள் எல்லாம் நம் பிரதேசத்தில் உள்ள சிதம்பரம், ஸ்ரீரங்கம், காஞ்சி, திருவண்ணாமலை, மதுரை போன்ற புண்ணியதலங்களையும், அதிலும் முக்கியமாக ராமேஸ்வரம் வந்து கடலில் புனித நீராடி கங்கை நீரால் ராமநாதஸ்வாமியை அபிஷேகம் செய்ய ஆசைப்படுகின்றனர். ஆன்மீகத்தில் எப்படி தேசியம் பின்னி பிணைந்திருக்கின்றது பார்த்தீர்களா? ஸ்ரீ ராகவேந்திரர் சிதம்பரத்திற்குப் பக்கத்தில் உள்ள புவனகிரியில் அவதாரம் செய்து, மந்திராலயத்தில் சமாதி ஆனார். ராஜஸ்தானில் தோன்றிய ஹாத்தி ராம்பாபா என்ற மஹாத்மா, திருப்பதியில் வந்து பல காலம் தங்கி, அந்தத் திருமலை வேங்கடேசனுக்குத் திருப்பணி செய்து, அங்கேயே சித்தியானார்.

இன்றும் அவருடைய சமாதி திருமலை மேல் இருக்கின்றது. ரிஷிகேசத்தில் ஆசிரமம் அமைத்து, பல வெளிநாட்டு பக்தர்களுக்கு எல்லாம் யோகத்தை உபதேசம் செய்த சுவாமி சிவானந்த சரஸ்வதி ஸ்வாமிகள், தாமிரபரணி கரையில் உள்ள திருநெல்வேலிக்குப் பக்கத்தில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர். திருக்கோயிலூருக்குப் பக்கத்தில் தபோவனத்தில் தன்னை அண்டியவர்களுக்கெல்லாம் அருளை வாரி வழங்கிய ஞானானந்தர், காஷ்மீர் பிரதேசத்தைச் சேர்ந்தவர். கன்னியாகுமரி கடற்கரையிலே வாழ்ந்து சேலத்தில் சமாதியான மாயம்மா வட இந்தியாவைச் சேர்ந்தவர். இன்று ராமகிருஷ்ணர் மடம் இந்தியா முழுவதும் உள்ள பக்தர்களை மொழி, இனம் இவற்றையெல்லாம் கடந்து இணைப்பதைப் பார்க்கின்றோம்.

அது போல, காசி பக்கத்தில் அவதாரம் செய்த இந்த மஹாத்மா, பாரத தேசம் முழுவதும் யாத்திரை செய்து, திருவண்ணாமலையில் வந்து தங்கி, தன்னுடைய அருள் சக்தியினால் தன்னை அண்டியவர்களின் துன்பங்களை அகற்றியதோடு மட்டும் அல்லாமல், அவர்களுடைய வாழ்க்கையையும் செம்மைப்படுத்தினார். மஹான்களால் தேசிய ஒற்றுமையும் ஏற்படுகின்றது பார்த்தீர்களா! இதை அடுத்து மத நல்லிணக்கத்தைப் பற்றியும் நாம் பலவாறு பேசியும், எழுதியும் வருகின்றோம். ஆனால், இந்த மத நல்லிணக்கமும் மஹான்களால்தான் ஏற்படுகின்றது. இவர் எப்பொழுதும் ராமநாமத்தை ஜபம் செய்து வந்ததால் இந்துவாகவும், தலையில் எப்பொழுதும் பச்சை துணியையே தலைப்பாகையாகக் கட்டி இருந்ததால், அதனால் இஸ்லாமியராகவும், எப்பொழுதும் கடவுளை தந்தை, தந்தை என்று சொல்லி வந்ததால், கிறிஸ்தவராகவும் திகழ்ந்து, தன்னைத் தேடி வந்த எல்லோரையும் ஜாதி, மதம் கடந்து எல்லோருக்கும் அருளை வாரி வழங்கினார். தன்னுடைய வாழ்நாள் முழுவதும், நமக்காகவே வாழ்ந்தார். தம்முடைய வாழ்க்கையையே உலகத்தின் நன்மைக்காக தியாகம் செய்துவிட்டார்.

அவர் ஆசிரமத்தில் தங்கி இருந்ததையும், அதற்கு முன்பாக அண்ணாமலை கோயிலின் சமீபத்தில் இருந்த சன்னதி தெருவில் இருந்ததையும் பலர் அறிவர். ஆனால், அதற்கும் முன்பாக, திருவண்ணாமலை ரயில் நிலையத்திற்குச் சமீபகாலமாக இருந்த

புன்னை மரத்தடியில் இருந்ததை சிலரே அறிவார்கள். அதற்கும் முன்பாக திருவண்ணாமலையில், அவ்வப்பொழுது கோயிலின் சமீபத்தில் அவரைக் கண்ட ஒரு பக்தர், இவரைப் பார்த்து தாங்கள் இந்த திருவண்ணாமலையில் எங்கு தங்கியிருக்கின்றீர்கள் என்று கேட்க, தான் தங்கியிருந்த இடத்தை அவருக்கு அழைத்துச் சென்று காண்பித்தார். பார்த்தவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. காரணம் என்ன தெரியுமா? மலையை ஒட்டி ஒரு பாழடைந்த அறை. உள்ளே எட்டிப் பார்த்தால் ஒரே பாம்புகள், தேள்கள், பூரான்கள் பல நெளிகின்றன. ஒரே அழுக்கு, ஒட்டடையுடன் இருந்தது அவர் தங்கியிருந்த அறை. இப்பேர்ப்பட்ட மஹாத்மா நடத்திய அற்புதங்கள் பலபல. அதை எழுத ஆரம்பித்தால் அது ஒரு பெரிய நூலாக முடியும். அந்த மஹாத்மா சமீப காலம் வரையில், நம்முடன் வாழ்ந்து இரண்டு வருடங்களுக்கு முன்புதான் சித்தியானார்.

---


ஸ்ரீ ஹரி:

## எமது வெளியீடுகள்

**நூல்கள்**

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்
2. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத உரைகள் | Cassettes, VCDs |
| 2. திருப்பாவை | Cassettes, Audio CDs |
| 3. பகவான் ரமணரின் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 4. பகவான் ரமணரின் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 5. Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |

**கீர்த்தனங்கள்**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassette, Audio CD |

For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs kindly send e-mail to "publications@madhuramurali.org"

# குருவருளும் திருவருளும்

இறைவன் ஒருவனுக்கு அருள் புரியும்பொழுது அவனுடைய மதத்தையோ, ஜாதியையோ, கல்வித் தகுதியையோ, பொருளையோ பார்ப்பதில்லை. இறைவன் பிறகு எதைப்பார்த்து அருள்புரிகின்றான் என்றால், யார் அவனுடைய அருள் வேண்டும் என்று நினைத்து உள்ளம் உருகி ப்ரார்த்திக்கின்றார்களோ, அவர்களே இறைவனுடைய அருளை அடைகின்றார்கள். குருவருளைக் கொண்டுதான் இறையருளை அடைய முடியும் என்பது நான்குமறை தீர்ப்பு. கண்களுக்குத் தெரியக்கூடிய, உலகத்தில் உள்ள ஏதாவது ஒரு தொழிலையோ, கலையையோ கற்றுக் கொள்வதற்கு அந்தத் தொழிலில் அல்லது கலையில் கற்றுத் தேர்ந்தவருடைய துணை ஆரம்பத்தில் அவசியம் என்பது ஒருவரும் மறுக்க முடியாது. கண்களுக்குப் புலப்படக்கூடிய இத்தகையவைகளுக்கே ஒருவருடைய துணை அவசியமானால், புலக்கண்களுக்குப் புலப்படாத தெய்வத்தை உணர்வதற்கு, அந்தத் தெய்வத்தை உணர்ந்தவருடைய துணை வேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

தெய்வம்தான் புலக்கண்களுக்குப் புலப்படவில்லையே, அதை நாம் ஏன் ஏற்க வேண்டும்? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம், ஒரு பிறவிக்குருடனுக்கு, எதிரில் இருக்கக் கூடிய ஒரு பொருள் தெரியாததால் அந்தப் பொருள் இல்லை என்று ஆகிவிடுமா? அதுபோல், ஞானம் இருக்கக்கூடிய மஹான்களுக்கு தெய்வமும், தேவர்களும், பல தெய்வீகக் காட்சிகளும் தெரிகின்றது. ஆகவே, இவையெல்லாம் இல்லை என்று ஆகிவிடாது. நம்மைத்தான் தயார்படுத்திக்கொள்ள வேண்டுமே தவிர இவைகளை மறுப்பது என்பது அறிவுடைமை ஆகாது.

ஸ்பர்சவேதி என்ற ஒரு மூலிகையைப் பற்றி பழைய நூல்களில் காணக் கிடைக்கின்றது. அந்த மூலிகையினுடைய பெருமை என்னவென்றால், அந்த மூலிகையால் இரும்பைத் தொடுவோமானால், இரும்பு தங்கமாகிவிடும். இந்த மூலிகையானது ஒரு இரும்பைத் தங்கமாக மாற்றியதே, அந்தத் தங்கத்தைக் கொண்டு மற்றொரு இரும்புத் துண்டை தங்கமாக மாற்ற முடியாது. மீண்டும் ஒரு

இரும்பை தங்கமாக்க வேண்டுமென்றால், மீண்டும் அந்த மூலிகையினுடைய துணை தேவை. ஆனால், ஒரு குருவானவர் ஒரு சீடனுக்கு ஞான உணர்வைக் கொடுத்து விட்டாரானால், அந்த சீடனால் பல பேருக்கு ஞான உணர்வைக் கொடுக்க முடியும், ஆகவேதான் இந்த ஸ்பர்ச வேதியை விட குரு சிறந்தவர் என்கிறார் ஆதிசங்கரர். சிலர் குருவைக் கொண்டு இறைவனை அடைகின்றார்கள். சிலருக்கு இறைவனே குருவாக வருவதும் உண்டு. பகவான் ரமணமகரிஷிகள், அருணகிரிநாதர் போன்றவர்களுக்கு இறைவனே குருவாக வந்தான். ஆகையால்தான் அருணகிரிநாதர் 'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே' என்று பாடியிருப்பதைப் பார்க்கின்றோம்.

இறைவனுக்கு உருவமில்லை என்று கருதி உருவ வழிபாடு செய்வது தவறு என்று நினைத்தவர்களும் தங்களை அறியாமல் குரு என்ற உருவத்தை வழிபடுகின்றார்கள். குருவும் தெய்வமும் என் முன்னே ஒரே காலத்தில் தோன்றுவார்களானால் முதலிலே நான் குருவைத்தான் வணங்குவேன் என்று கபீர்தாசர் கூறுகின்றார். அதற்கு அழகான காரணமும் கூறுகின்றார். ஒரு தாயார் குழந்தையை 10 மாதம் வயிற்றிலே சுமந்து, அந்தக் காலத்தில் குழந்தையின் நன்மைக்காக பல சுகங்களை தியாகம் செய்கின்றாள். பிரசவ வேதனையை அனுபவித்து அந்தக் குழந்தையை பெற்றெடுக்கின்றாள். அந்தக் குழந்தையினுடைய மல, மூத்திரங்களையெல்லாம் அசுத்தம் பார்க்காமல் சுத்தம் செய்து, அந்தக் குழந்தையை உயிரினும் பேணி வளர்க்கின்றாள். ஆனால், இந்தத் தாய் படும் சிரமங்களையெல்லாம் தந்தை அனுபவிப்பதில்லை. ஆனால், தந்தைக்கும் அந்தக் குழந்தை மேல் உரிமை இருக்கிறது.

அதுபோல் நம்முடைய மனதில் காமம், கோபம், பயம், போட்டி, பொறாமை முதலிய அவகுணங்கள் இருக்கும் நிலையிலும் குருவானவர் நம்மை தடுத்தாட்கொண்டு, நம்மை அறியாமலேயே சுத்தப்படுத்தி, ஒரு ரோஜா புஷ்பமாக, ஸ்படிகமாக, ஸ்வர்ணமாக மாற்றி இறையருளுக்கு நம்மை பாத்திரமாக்கி விடுகின்றார்கள். ஆனால், இறைவனோ நம்முடைய மனதில் அவகுணங்கள் இருக்கும் நிலையில் நமக்கு அருள்புரிவதில்லை. நம் மனது சுத்தமானால்தான் இறைவன் அருள் புரிகின்றான். ஆகையால்தான் கபீர்தாஸர் திருவருளைக் காட்டிலும் குருவருளே சிறந்தது என்று

கூறுகின்றார். சைவ சம்பிரதாயத்தில் அப்பூதிஅடிகள் தன்னுடைய குருவான திருநாவுக்கரசரையே தெய்வமாக வழிபட்டு வந்ததும், வைணவ சம்பிரதாயத்தில் கூரத்தாழ்வார், இராமானுஜரையே தெய்வமாக வழிபட்டு வந்ததும், மதுரகவி ஆழ்வார், நம்மாழ்வாரையே வழிபட்டு வந்ததும் குருபக்தியினுடைய பெருமையை நமக்கு உணர்த்துகின்றது அல்லவா? நாம் அனைவரும் குருவருளுக்குப் பாத்திரமாவோமாக! குருவருளால், எங்கும் தேடிக் கிடைக்காத மன அமைதியானது, குருவினுடைய அருளுக்குப் பாத்திரமானவனுக்குக் கிடைப்பதை ஒருவன் தன்னுடைய வாழ்க்கை அனுபவத்தில் உணரலாம்.

ஸ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

- மதுரமுரளிக்கான சந்தா தொகையை, ''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'' என்ற பெயரில் மட்டுமே M.O. or D.D. ஆக அனுப்ப வேண்டும்.

  உள் நாடு : வருட சந்தா ரூ. 60/- ஆயுள் சந்தா ரூ. 1000/-
  வெளி நாடு : வருட சந்தா ரூ. 300/-
- சந்தாவை காசோலையாக அனுப்ப வேண்டாம்.
- சந்தா எண், சந்தாதாரர் முகவரி இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ளமாட்டாது.
- மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் Address labelல் இரண்டாம் வரியில் உள்ளது.
- சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்பினால்தான் வரும் மாதத்தில் செயல்படுத்த முடியும்.
- மதுரமுரளி விஷயமாக அனுப்பும் தபால்களின் கவரில் பின்வருமாறு முகவரியை கட்டாயம் எழுதவும்.

''**மதுரமுரளி**'', குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,
24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

# மாலே மணிவண்ணா - 27

– மஹாவித்துவான், மயிலம் **வே. சிவசுப்பிரமணியன்**

சிவபெருமானை, ''யாழ் கெழு மணி மிடற்று அந்தணன்'' என்று அகநானூறு கடவுள் வாழ்த்து அழைக்கிறது. இப்பகுதிக்குப் பழைய உரை எழுதிய ஆசிரியர் 'சாம வேதம் பாடின மணிபோலும் நிறத்தையுடைய மிடறு' என்று உரை எழுதினார். மணி என்பது நீலமணியை இங்கு குறிக்கிறது. 'நீலகண்டன்' என்பதை அது எடுத்துக் காட்டும் – 'யாழ் கெழு' என்ற பகுதிக்கு 'சாம வேதம் பாடின' என்று உரை வருகிறது. 'கெழு' என்றால் 'பொருந்திய' என்று பொருள். அதையே இடத்துக்கேற்ப 'பாடின' என்று உரைகாரர் எழுதினார். 'யாழ்' என்பதற்கு 'சாம வேதம்' என்று உரை எழுதினார். 'யாழ்' என்பது ஓர் பழந்தமிழ் நரம்பிசைக்கருவி. அது நாதத்தை எழுப்புமேயன்றி வாய்ப்பாட்டுபோல சொல்லோசை தருவதன்று. நாத மாத்திரையாகிய இனிய கானமாக இருப்பது நான்கு வேதங்களினும் சாம வேதம் ஒன்று மட்டுமே ஆதலன். 'யாழ்' என்ற நாத மாத்திரையான நரம்பிசைக் கருவிக்குரிய பெயருக்கு சாம வேதம் என்று பொருள் எழுதினார்.

சிவபெருமான் இடையறாமல் எப்பொழுதும் சாமவேதத்தை இசைத்துக் கொண்டிருப்பதால் அவன் மிடறு 'சாம வேதம்' பொருந்திய கண்டம் எனப் பெற்றது. கயிலையைப் பெயர்த்தெடுத்த இராவணன் யாழிசையில் சாம வேதம் பாடிச் சிவபெருமானிடத்து நானாம் வானாம் பெற்ற வரலாறும் இதனை வலியுறுத்தும்.

ரிக், யஜுர், அதர்வணம் என்னும் வேதங்கள் சொல்லும் பொருளுமாய் இருப்ப சாம வேதமோ ஓசையும் பொருளுமாய் இருப்பது என்பதை 'யாழ் கெழு' என்பது உணர்த்துகிறது. வேதம் நான்குமே கீதம்தான். அவற்றுள் சாம வேதம் நாத கீதமாக இருப்பது ஆதலின் வேத கீதம் என்பதில் சாமம் நாதமே முழுமையாகப் பெற்று இனிமை உடையதாக உள்ளது. எழுத்து வடிவமான ஒலியாக இருப்பதைக்காட்டிலும் வெறும் ஒலி வடிவமான கானமாக இருப்பது செவிக்கு இனிமை மிகவும் தருவது அல்லவா. குழலிசை,

யாழிசை மிக்க இன்பம் தருவன ஆதலின் 'இன்னிசை' என்று பொருள் தரும் 'சாமம்' என்ற பெயர் அந்த வேதத்திற்கு அமைந்தது சாம வேதத்தைப் பரிபாடல் ஓசையாலேயே பெயரிட்டு அழைக்கிறது.

'திருமாலே' உன்னைச் சாமவேதம் இத்தன்மை உடையவன் என்று சொல்லுவதனால் உன் தன்மைகளை நாங்கள் விளங்க அறிந்து கொண்டோம் என்கிறார் ஆசிரியர். இங்கே சாம வேதத்தின் நாத கீதமாகிய இயல்புக்கேற்ப அதனை ஒரு பெயர் கொடுத்து அழைக்கிறார். அது 'ஏள' என்ற அளபெடை அநுகரண ஓசையாகும். 'ஏள' என்னும் இசை உடைய சாம வேதத்தை உபசார வழக்கால் 'ஏள' என்று அழைத்தார் என்ற பழைய உரையும் நினைக்கத்தகுவது.

சாமவேதம் பற்றி பழந்தமிழ்ச் சிந்தனை பரிபாடற் பகுதியால் நமக்கு விளங்குகிறது. வேத ஆராய்ச்சியில் விற்பன்னர்களாக விளங்கி அவற்றை நன்கறிந்து பயின்று பயன் கொண்டவர்கள் பழந்தமிழ்ப் புலவர்கள் என்பதை 'யாழ்' என்பதும், 'ஏள' என்பதும் ஆகிய சாமவேதம் பற்றிய உவமை வழக்கும் உபசார வழக்கும் ஆகியவற்றால் ஆகிய பெயர்கள் நமக்கு விளக்குகின்றன.

திருமாலின் தன்மைகள் பற்றிச் சாமவேதம் கூறுமாறு கூறுகிறார்.

எம்பெருமானே! நெருப்பில் நீ வெம்மையாக இருக்கிறாய். மலரில் நறுமணமாக இருக்கிறாய். கற்களில் மணியாம் தன்மையாக இருக்கிறாய், சொற்களில் சத்தியமாக இருக்கிறாய், அறத்தினுள் அன்பாக இருக்கிறாய். மறம் என்கின்ற வீரத்தில் வலிமையாக இருக்கிறாய். வேதத்தில் உபநிடதம் எனப்படும் மறையாக இருக்கிறாய். ஐம்பூதங்களுள் மற்ற நான்கும் (நிலம், நீர், தீ, காற்று) தோன்றுவதற்கு முதலாகிய (பூதமாகிய) ஆகாயமாக இருக்கிறாய். சூரியனில் தகிக்கின்ற வெம்மைப் பேரொளியாக இருக்கிறாய். சந்திரனில் குளிர்ச்சியாக இருக்கிறாய். இவ்வாறு சொல்லப்பட்ட அனைத்துப் பொருளாகவும் நீயே இருக்கிறாய். அப்பொருள்களின் உட்பொருளாகவும் நீயே இருக்கிறாய். இங்கு சொல்லாத எல்லாப் பொருளும் நீ. அவற்றின் உட்பொருளும் நீயே. ஆகையால் நீ

பிறபொருள்கள் எல்லாம் தங்குதற்குரிய பொருளாகவும் உள்ளாய். பிறபொருள்களில் தங்கியுள்ள பொருளாகவும் உள்ளாய். வியாபகமாகவும் வியாப்பியமாகவும் எல்லாப் பொருளும் தங்குவதற்கு ஆதாரமாகவும், நீயே இருக்கிறாய். எல்லாப் பொருளிலும் தங்கியிருக்கின்ற ஆதேயமாகவும் நீயே இருக்கிறாய். ஆகையால் உன்னை ஒன்றில் உறைபவன் என்னும் சொல்ல முடியவில்லை. உறையப்படுபவன் என்றும் சொல்ல முடியவில்லை.

நீ உறையும் பொருளும், நின்னால் உறையப்படும் பொருளும் உன்னோடு கொண்டுள்ள சம்பந்தம் எங்களால் உணர இயலாது மாயத்தன்மை உடையதாய் உள்ளது.

*'ஏஎ' இன கிளத்தலின் இனைமை நற்கு அறிந்தனம்*
*தீயினுள் தெறல்நீ பூவினுள் நாற்றம் நீ*
*கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மை நீ*

*65. அறத்தினுள் அன்பு நீ மறத்தினுள் மைந்துநீ*
*வேதத்து மறைநீ பூதத்து முதலும் நீ*
*வெஞ்சுடர் ஒளியும்நீ திங்களுள் அளியும் நீ*
*அனைத்தும் நீ அனைத்தின் உட்பொருளும் நீ ஆதலின்*
*உறைவும் உறைவதும் இலையே உண்மையும்*

*70. மறவிஇல் சிறப்பின் மாயம் ஆர் அனையை*

(குறிப்பு : 'ஏஎ' - சாமவேதம், இனைமை-இத்தன்மைகள், தெறல்-சூடு, மைந்து-வலிமை, மறை-உபநிடதம், முதல்-இங்கு ஆகாயம் மற்றவற்றுக்கு முதலாதலின். உறைவு-ஆதாரம் வியாபகம், உறைவது-ஆதேயம்-வியாப்பியம்.)

பகவத் கீதையில் பத்தாவது விபூதியோகத்தில் பகவான் அர்ச்சுனனுக்குச் சொல்லிய தன் தன்மைகளின் சிறப்பை இங்கு நினைத்துக் கண்டு மகிழலாம்.

22வது சுலோகத்தில் 'வேதங்களில் யான் சாமவேதம்' என்று பகவான் சொல்கிறார். அந்த சாமவேதம் பகவானின் தன்மைகளைச் சொல்வதாகப் பரிபாடல் இங்கு விவரிக்கிறது.

32 படைப்புகளில் ஆதியும் அந்தமும் நான் என்று பகவான் சொல்வதைக் கீதையில் காண்கிறோம்.

எல்லாப் பொருளிலும் உறைந்துள்ள சிறந்த இயல்புகளாகப் பகவான் உள்ளார் என்று நினையும் போதே எல்லாப் பொருளும் ஒடுங்கி விடுகின்ற அந்தமாகவும் பகவான் இருக்கின்றார் என்றால் எல்லாம் பகவானுக்குள் ஒடுங்கிவிடுகின்றன. அவற்றுக்கு ஒடுங்கும் இடமாகப் பகவானே ஆகிறார் என்றும் ஆகிறார். இதையே 'உறைவும் உறைவதும் இலையே' என்று பரிபாடல் சொல்கிறது.

உலகத்து மறதியுடையார் மறதியில் சிறப்புப் பெறுதல் காரணமாக இறைவனின் இயல்புகளை ஒரு படித்தாக உணரும் ஆற்றல் இல்லை. ஆதலின் அவன் உறைவோனா? உறையப்படுவோனா என்று அறியாது மயங்குகின்றனர். இவ்வாறு மயங்குகின்ற அவர்கள் அவனை 'மாயன்' என்கின்றனர். அவன் அத்தன்மை உடையவனாக இருக்கின்றான்.

''மறவிஇல் சிறப்பின் மாயமார் அனையை'' என்ற அடிக்கு வேறுபொருள். உலக உயிர்கள் மறந்து மறந்து அறியும் இயல்புடையன. ஒவ்வொன்றாக அறிந்தும் அறிந்த ஒன்றையும் மறந்தும் எல்லாவற்றையும் ஒருங்கே அறிய மாட்டாமல் துன்புறும் இயல்புடையன. இறைவனோ மறவி இல்லாத சிறப்பினை உடையவன். எல்லாவற்றையும் எப்பொழுதும் ஒருங்கே உணரும் உணர்வுடையவன் ஆதலின் ஒரே சமயத்தில் உறைவோனாகவும் உறையப் படுவோனாகவும் உள்ள அவன் தன்மை மாயமுடையதாய் உள்ளது எனவும் பொருள். இறைவனது எண் குணங்களுள் இயற்கை உணர்வனன். (அநாதி போதம்), முற்றும் உணர்தல் (சர்வஜ்ஞத்வம்) என்ற இரண்டையும் இங்கே பொருத்திக் காண்க.

இதனையே,

*''ஆண் அல்லன் பெண் அல்லன் அல்லா அலியும் அல்லன்*
*காணலும் ஆகான் உளனல்லன் இல்லை அல்லன்*
*பேணுங்கால் பேணும் உருவாகும் இல்லையும் ஆம்*
*கோணை பெரிதுடைத்து எம்பெம்மானைக் கூறுதலே''*

(திருவாய் - 2:5.10)

*''அறியா மா மாயத்து அடியேனை வைத்தாயால்''*

(திருவாய். 2:3.3.)

என்று நம்மாழ்வாரும் பகவானைச் சொல்வது இயலாது 'கோணல்' பெரிதுடைத்து எனக்கூறி அலமந்தது காண்க.

'அறத்தினுள் அன்பு' என்பது நுனித்துரைத்தக்கது-உலக வாழ்க்கைக்குரிய அறங்களை அறத்துப் பாலில் கூறவந்த வள்ளுவர் இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை நலம், புதல்வரைப் பெறுதல் என்று முதல் மூன்று அதிகாரங்களில் குடும்பம் பற்றிக்கூறி மற்ற அறங்களைக் கூறும் முன் 'அன்புடைமை' கூறியதும் அறத்திற்கு அன்பே அடிப்படை என்பதைக் காட்டும்.

''யாதொன்றும் தீமை இலாத சொலல்'' வாய்மை என்றும், ''புரைதீர்ந்த நன்மை பயக்கும்'' பொய்மையும் வாய்மை என்றும், ''ஒன்றாக நல்லது கொல்லாமை'' என்றும் கூறியது கொண்டும் அறத்திற்கு மூலம் அன்பே என்பது விளங்கும்.

'வேதத்து மறை நீ' என்பது ஓதி உணரத்தக்கது- மறை என்றாலே வேதம் ஆயினும், வேதம் என்பது பொதுவாகவும் மறை என்பது சிறப்பாக உபநிடதத்தைக் குறிப்பதாகவும் வரும் வேதம் நான்கு உட்பிரிவுகளைக் கொண்டது. ஸம்ஹிதை, பிராம்மணம், ஆரண்யகம், உபநிஷத் என்று நான்கு பிரிவுகள்.

தோத்திரங்கள், உலகவாழ்வு நெறிகள், வேள்வி மந்திரங்கள் என்பனவற்றோடு தத்துவங்களையும் கலந்து சொல்கிற பகுதி மற்ற மூன்றுமாக, வேதத்தின் மறைந்த பொருளாகிய தத்துவ நுட்பத்தையே விரிவாக நுட்பமாக ஆராய்ச்சி செய்து உறுதி செய்து பிரம்ம ஞானத்தைத் தருகின்ற தத்துவ நுட்பச் செறிவுடையது 'உபநிடதம்' ஆகையால் மறைந்த பொருளுடையது என்னும் பொருளில் வரும் 'மறை' என்னும் சொல் உபநிடதத்தைச் சிறப்பு வகையால் குறிக்கும் என்பதைக் குறிக்குமாதலின் வேதத்தின் உயிராக இருக்கின்ற உபநிடதத்தை ''வேதத்து மறை நீ'' என்று சாம வேதம் உரைப்பதாகக் கூறினார்.

இனி ஒவ்வொரு வேதத்துக்கும் உரிய உபநிடதங்கள் வருமாறு.

ரிக்வேதம் : ஐத்ரேய, கௌஷீதகி

யஜுர்வேதம் : தைத்ரீய, ச்வேதாச்வதார, கடோ, பிருஹதாரண்யக, மைத்ரி, ஈசாவாஸ்ய

ஸாமவேதம் : கேன, சாந்தோக்ய

அதர்வண வேதம் : முண்டகோப, மாண்டூக்ய, பிரச்ன. இவ்வாறு வேதத்தின் மறையாகிய உபநிடதங்கள் வகுக்கப்பட்டு உள்ளன என்றறிந்தால் வேதத்து மறை என்பது கூறியது கூறலாகாது.

பகவான் எல்லாவற்றுக்குள்ளும் தான் நிறைந்து உயிர்க்கு உயிராக இருக்கிறான். பகவானுக்குள்ளே எல்லா உயிர்களும் இருக்கின்றன. எனவே உள்ளும் புறம்புமாகப் பொருள்களில் விரவி நிற்கின்றபொழுது அவனை எப்படிச் சொல்வது என்பது விளங்க வில்லை என்பது பரிபாடற்கருத்து.

விஷ்ணு சஹஸ்ர நாமத்தில் 6வது திருநாமம். ‘பூதப்ருத்’ - தோன்றிய பொருள் எல்லாவற்றையும் தாங்குபவர். உயிர்களுக்குப் பூமிபோல 7வது திருநாமம் ‘**பா**வ:’ - எல்லாப் பொருளின் இருக்கையாகவும் இருக்கும் பொருளாகவும் இருப்பவர். 8வது திருநாமம், ‘பூதாத்மா’ பொருள் அனைத்திலும் உள்ளும் புறமும் நீக்கமற நிறைந்திருப்பவர். இத்திருநாமங்களின் திரண்ட பொருளைப் பரிபாடல் விளக்கி நிற்கிறது.

(தொடரும்)

---

**ஸ்ரீ ஹரி:**

**ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில், மஹாரண்யம்**

பக்தர்களின் தரிசனத்திற்காக கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 4.30 மணி முதல் 11.30 மணி வரை
மாலை 3.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 27

டெல்லியைச் சேர்ந்த ஸ்ரீ ஈச்வரதயாள் மாதுர் என்பவருக்கு பி.ஏ பாஸ் செய்த பிறகு வ்ருந்தாவனத்தைச் சேர்ந்த ஸாதுமாவின் சிஷ்யரான பண்டிட் மங்கள்சேன் என்பரின் தொடர்பு ஏற்பட்டது. அவரிடமே தனது 25வது வயதில் தீக்ஷை பெற்று வ்ருந்தாவனத்தை அடைந்தார். இரண்டு, மூன்று வருடம் அங்கு ப்ரேம் விச்வவித்யாலயாவில் பேராசிரியராக இருந்தார். இதற்கு நடுவில் அங்கு அவருக்கு பஜனையில் ஏற்பட்ட தீவிர ஈடுபாட்டால் உத்யோகத்தை சரிவர செய்ய முடியவில்லை. வேலையை ராஜினாமா செய்தார். சன்யாஸம் ஏற்றார். ஈச்வரதாஸ் என்ற நாமம் ஏற்பட்டது.

கௌராங்கரின் லீலை சம்பந்தமாக கவிதை புனைய ஆரம்பித்து தனது நேரத்தை அதிலேயே கழித்தார். ஸ்ரீ ஓம்ப்ரகாஷ் என்ற கீர்த்தனம் செய்யும் பாடகர் அவரது கவிதைகளுக்கு அபிநயத்துடன் பாட ஆரம்பித்தார். தனது கவிதைகளுக்கு இங்கனம் கீர்த்தன–நர்த்தன ரூபத்தில் உயிர் கொடுத்து அதைக்கண்டு ஈச்வரதாஸ் ஆத்மத்ருப்தி அடைந்து வந்தார். ஓம்ப்ரகாஷ் கௌர்லீலா கீர்த்தனம் செய்து அபூர்வமான புகழை அடைந்தார். அவரது பின்னணியில் ஈச்வரதாஸ் இருந்தது சிலருக்குத்தான் தெரியும்.

அதேபோல் ஆசார்ய கிஷோரிரமண்ஜி என்பவரும் பாகவத ப்ரவசனம் நடத்துவதில் புகழ் பெற்று விளங்கினார். இவரையும் 17 வயதிலேயே வற்புறுத்தி பாகவத ப்ரவசனம் செய்யுமாறு பணித்த பெருமை ஈச்வரதாஸுக்கே சேரும். தினமும் பாகவத ப்ரவசனத்துக்குத் தேவையான விவரங்களை அத்புதமாக தயாரித்து கிஷோரிரமணுக்கு ஈச்வரதாஸ் தருவார். அவர் ப்ரவசனம் செய்யும்போது ஒரு மூலையில் அமர்ந்து கேட்பார். ப்ரவசனம் முடிந்தவுடன் எங்கெல்லாம் அவர் விவரமாக சித்தாந்தங்களைச் சரிவர கூறவில்லை. எங்கெல்லாம் நல்ல விஷயங்களை சொல்லாமல் மறந்துவிட்டார் என சுட்டிக்காட்டுவார்.

ஈச்வரதாஸ்பாபா அப்போது வ்ரஜத்தில் வாழ்ந்த ஸ்ரீகௌராங்கதாஸ் பாபாவின் பாகவத ப்ரவசனங்களையும் ச்ரத்தையுடன் கேட்பார். ராதாக்ருஷ்ண மூர்த்தி பூஜையில் மிகவும் அன்புடன் ஈடுபட்டார். ராதாக்ருஷ்ணனின் எட்டு கால லீலைகளையும் எந்நேரமும் சிந்தனம் செய்வார். தன்னை ஒரு சகியாக **பா**வித்துக்கொண்டு குடிசைக் கதவைச் சாத்திக்கொணடு ராதாக்ருஷ்ண ஸேவையிலும் த்யானத்திலும் ஈடுபடுவார்.

டாகுருக்கு மிகவும் ஆத்மார்த்தமாக ஸேவை செய்வார். ராதாக்ருஷ்ண மூர்த்தியை தனக்குப் பக்கத்திலேயே ஒரு கட்டிலில் சயனிக்க வைப்பார். இரவில் அவர் தாகத்துக்கு நீர் அந்தினாலும் முதலில் ராதாக்ருஷ்ணருக்கு நீர் சமர்ப்பித்து விட்டு தான் அருந்துவார். அவருக்கு குளிர் ஏற்பட்டால் முதலில் இறைத் தம்பதிகளுக்கு கம்பளி போர்த்திவிட்டு, தான் போர்த்திக்கொள்வார்.

அவருக்கு ஸ்ரீ கோபால்தாஸ், ஸ்ரீராம்துலாரே என்ற இளைஞர்கள் ஸேவை புரிந்து வந்தனர். ஒரு நாள் ஈச்வரதாஸ் பாபாவுக்கு ஜ்ஊரம் கண்டது. கோபால்தாஸ்பாபா டாகுர் ஸேவா செய்ய நியமிக்கப்பட்டார். அவரும் தினமும் ப்ரேமையுடன் பகவானுக்கு ஸேவை செய்தார். ஒரு நாள் பூஜையின் நடுவில் ராதாராணியின் கால்களில் அணியும் நூபுரம் காணாமல் போய்விட்டது. எத்தனையோ தேடியும் கிடைக்கவில்லை. மிகவும் பயந்துகொண்டே அவர் ஈச்வரதாஸ்பாபாவிடம் இதுபற்றிக் கூறினார். உடனே அவர், ''பீடம், சிம்ஹாஸனம், கட்டில் இவற்றிலெல்லாம் நன்றாகத் தேடு. எங்கு தொலைந்து போகும்'' என்றார். மறுபடியும் கோபால்தாஸ் தேடியும் நூபுரம் கிடைக்கவில்லை. ஈச்வரதாஸூம் கவலையில் ஆழ்ந்தார். பிறகு யதார்த்தமாக ''கோபால்! இவர்கள் இருவரும் தினமும் இரவில் ஸேவாகுஞ்சத்தில் ராஸம் செய்வார்கள் இல்லையா? அங்கு போய் பார். ராஸ மண்டபத்தில் எங்காவது ராதையின் நூபுரம் விழுந்துகிடக்கிறதா என்று போய் பார்த்துவிட்டு வா'' என்றார்.

கோபால்தாஸ் ஸேவாகுஞ்சத்துக்கு ஓடினார். பழைய ராஸமண்டபத்துக்குள் அவர் ஏறினதுமே அங்கு ஈசான மூலையில் ராதையின் நூபுரம் கிடந்ததைக் கண்டு அவர் ஆனந்தக்

கூத்தாடினார். அதை எடுத்து கண்ணீர் பெருகும் கண்களில் ஒற்றிக் கொண்டார். குடிசைக்கு வந்து ஈச்வரதாஸ்பாபாவிடம் அதைக் கொடுத்துவிட்டு அழுதுகொண்டே கூறினார், ''ஐயகோ! நான் இன்னும் செல்லமான ராதையின் ஸேவைக்கு யோக்கியனாக ஆகவில்லை போலும்! ராஸத்தின்போது அவர்களது நூபுரம் கழன்று விழுந்ததைக் கவனிக்காமல் அலட்சியமாக அங்கேயே விட்டு விட்டு வந்துவிட்டேனே!'' என்றார்.

மூன்று வருடங்கள் ஈச்வரதாஸ்பாபா ஜ்ஹரத்துடன் இருந்தார். மெல்ல மெல்ல அவரது சரீரம் க்ஷீணதசையை அடைந்தது. அவரால் திரும்பிக்கூட படுக்க முடியவில்லை. ஆனாலும், கண்ணனின் லீலாஸ்மரணம் விடாமல் செய்து வந்தார். கடைசியில் ஒருநாள் இரவு அவர் ''என்னை மண்ணில் படுக்க வை'' என்றார்.

அவரை வ்ரஜத்தின் பூமியில் படுக்க வைத்தனர். கோபாலும், ராமதுலாரேயும் அவரது இருபுறமும் அமர்ந்து மஹாமந்திரத்தை கீர்த்தனம் செய்ய ஆரம்பித்தனர். இரவு 3 மணிக்கு அவர் கேட்டார் ''மணி என்ன ஆகிறது?'' என்று. பிறகு 4 மணிக்கு மறுபடி ஒருமுறை மணி என்ன என்றதும், கோபால் 4 மணிக்கு என்றார். ராதாரமணன் கோவிலின் மணி ஓசை கேட்டது.

''அப்படியா'' என்றார். காலையின் மங்கள ஸ்லோகங்களை ஈச்வரதாஸ்பாபாவின் வாய் முணுமுணுத்தது. ஸ்லோகங்கள் முடிந்ததும் எங்கிருந்தோ சக்தியைப் பெற்றார். எழுந்து உட்கார்ந்துகொண்டு தனது இருபுஜங்களையும் உயர்த்தி கண்ணீருடன் விரிந்த நயனங்களை படபடவென்று கொட்டினார். பிறகு மேலே யாரையோ பார்த்து பேசுவது போல் ''செல்விக்கும் ஜய்! செல்விக்கும், செல்வனுக்கும் ஜெய்!! செல்விக்கும் . . . . '' அவ்வளவுதான். மூன்றாம் முறை ஆரம்பித்ததும் அவரது சரீரம் வ்ருந்தாவன மண்ணில் புரண்டு வீழ்ந்துவிட்டது. மூன்றாவது முறை செல்வியை அழைக்கும் போதே அவர் செல்வியின் சரணத்தை அடைந்துவிட்டார்!

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

# எது ப்ரவசனம்?

தான் எதை உபதேசிக்கிறாரோ, அதை அனுஷ்டானத்தில் வைத்திருக்க வேண்டும். பிறருக்கு, தான் உபதேசம் செய்வதாக நினைக்காமல், பலருடன் சேர்ந்து பகவத் விஷயத்தை அனுபவிக்க இது ஒரு சந்தர்ப்பம் என்று நினைக்க வேண்டும். இவ்வளவு ரூபாய் சன்மானம் என்று கேட்கக் கூடாது. அவர்களாகக் கொடுத்தால் வாங்கிக்கொள்வதில் தவறில்லை. வித்வான்கள் இருக்கிற சபையில் அவர்களுக்குத் தகுந்த மாதிரியும், சாமானியர்கள் இருக்கக் கூடிய சபையில் அவர்களுக்கு ஏற்ற முறையிலும் பிரவசனம் செய்ய வேண்டும். ஒருகாலும் ஆத்மஸ்துதியும், பரநிந்தையும் இருக்கக் கூடாது. தனிப்பட்ட நபர்களை விமர்சனம் செய்யக்கூடாது. அரசியலையோ, ஜாதி த்வேஷங்களையோ, கிராமியமான பேச்சுக்களையோ பேசக்கூடாது. ஒரு சபையில் தனி ஒருவரை மட்டும் பார்த்துப் பிரவசனம் செய்யக்கூடாது. பத்து பேர் இருந்தாலும் அல்லது ஆயிரம் பேர் இருந்தாலும், உற்சாகம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். எந்த விதமான சித்தாந்தங்களையும், மத ஆச்சாரியர்களையும் கண்டித்துப் பேசக்கூடாது. தன் பக்கம் இருக்கும் நியாயத்தை எடுத்துக் கூறலாம். ஒருகாலும் சொல்ல வந்த விஷயத்திலிருந்து விலகக்கூடாது. உப கதைகளையும் உதாரணங்களையும் அதற்குச் சம்பந்தம் உள்ளதாகவே வைத்துக் கொள்ள வேண்டும். இதை ஒரு தெய்வீக பொழுதுபோக்காக நினைக்காமல் சாதனையாக நினைத்துச் செய்ய வேண்டும். கேட்பவர்கள் மனதில் நாம் சொல்லுகின்ற விஷயம் ஓரளவாவது பதிவதற்கான தபஸை நாம் சம்பாதித்துக்கொள்ள வேண்டும். டாம்பீகமும் அகம்பாவமும் இல்லாமல் இருக்க வேண்டும். வஸ்துவின் கௌரவத்தை ஒருபோதும் குறைக்கக் கூடாது. ச்ரோதாக்களின் (கேட்பவர்களின்) மன நிலையை வஸ்துவின் கௌரவத்தைச் சரியாக புரிந்துகொள்ளும் அளவிற்கு உயர்த்த வேண்டும்.

மேற்படி யோக்யதாம்சம் இருப்பவர்களிடம் பிரவசனம் கேட்டால்தான், அதன் பலனை நாம் அடைய முடியும்.

# பக்தி

உலகம் தெய்வத்தின் வசம் உள்ளது. தெய்வமோ மந்திரத்தின் (நாமத்தின்) வசம் உள்ளது. அபேதமான **பா**வத்தில் உபாசிப்பவர்கள் வேதாந்திகள். பேத பாவத்தில் உபாசிப்பவர்கள் பக்தர்கள், சிவ அம்சமுள்ளவர்களுக்கு வேதாந்த ருசியும், விஷ்ணு அம்சமுள்ளவர்களுக்கு பக்தி ருசியும் உண்டாகும் என்பது வழக்கு. ஆகவே தான் சிவ யோகி, சிவ ஞானி என்றும், ஹரி பக்தர்கள், பாகவதாள் என்றும் வழக்கத்தில் வந்துள்ளது.

பக்தியில், அதிகமாக ஸ்மரணமும், ச்ரவணமும், கீர்த்தனையும் விதிக்கப்பட்டுள்ளதால், உபாசிக்க வேண்டிய தேவதைக்கு சரித்திரமும், லீலையும், அழகும், சௌலப்யமும் இருக்கவேண்டியதாக உள்ளது. இவை அனைத்தும் பூர்ணமாக ஸ்ரீ ஹரியிடம் உள்ளது. இதுவரை நாம் எவ்வளவோ வேதாந்த மார்க்கத்தில் வந்த மஹாத்மாக்களின் சரித்திரங்களைப் பார்த்தால், அவர்களும் ஒரு தெய்வத்தின் துணை கொண்டுதான் அப்படிப்பட்ட வேதாந்த தத்துவத்தை அடைந்தது தெரிய வருகிறது.

தெய்வமே வேண்டாம் என்று வேதாந்த மார்க்கத்தில் பிரவேசித்த பலருக்கும், குரு என்பவர் நிச்சயமாக உண்டு. குரு என்பவர், ஈச்வரனின் ஒரு அங்கமாகவே ஆவதால், அவர்களும் எவ்வளவு தான் தெய்வத்தை உபாசிக்காவிட்டாலும், தன்னை அறியாமலேயே துவைத **பா**வத்திற்கு வந்துவிடுவதைப் பார்த்திருக்கிறோம். அவர்களனைவரும், உபாசகர்கள் தங்கள் இஷ்ட தெய்வத்திடம் காட்டும் பக்தியைக் காட்டிலும், அதிகமான பக்தியை தங்கள் குருவிடம் காட்டி இருப்பதைக் காண்கிறோம். அபேதமான ஒரு **பா**வத்தை அடைவதற்கு, அளவில் வித்தியாசம் இருந்தால் கூட, பேத **பா**வம் இல்லாமல் அடைவது அசாத்தியம்.

பக்தி என்பது ஒரு அழகு. இந்த பக்தி ராஸிக்யமான இதயமுள்ளவர்களுக்கே புரியக்கூடியது. இது ஒரு உணர்வு. ஆகவே ஒரு வரையறைக்கு உட்படாதது. இப்படித்தான் பக்தி

செய்யவேண்டும் என்று சொல்லிக் கொடுக்க முடியாது. இது ஒரு பாவம். ஒரு தாய்க்கு தன்னுடைய குழந்தையிடம் ஸ்வபாவமாக ப்ரேமை இருக்கும். அது போல இறைவனிடம் ஒருவனுக்கு ஸ்வபாவான ப்ரேமை ஏற்பட வேண்டும்.

இப்பேர்ப்பட்ட ப்ரேமையை ஏற்படுத்திக் கொள்ள முடியாது. எந்த விதமான எதிர்பார்ப்புமின்றி (மோக்ஷம் உட்பட) பக்தி செய்வதுதான் ப்ரேம பக்தி. இத்தகைய பக்தியில், ஒருவனுக்கு எவ்வளவு கஷ்டம் வந்தாலும், அவன் பொருட்படுத்த மாட்டான். பக்தியையும், லௌகீக விஷயங்களையும் சம்பந்தப்படுத்திக் கொள்ள மாட்டான்.

தெய்வம் சர்வத்திலும் வியாபித்துள்ளதால், உபதேசம் என்பது தெய்வத்திடமிருந்தோ, குருவிடமிருந்தோ நேரில் வர வேண்டும் என்ற அவசியமில்லை. உலகத்தில் உள்ளவற்றில் ஏற்படும் ஒவ்வொரு அனுபவமும் உபதேசமே.

உலகத்தில் அநேக மஹாத்மாக்கள் கடுமையான ஸாதனையின் மூலம் தான் இறைவனை அடைந்துள்ளார்கள் என்பது உண்மையானாலும், அப்படி ஸாதனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாவதற்குக் காரணமும் தெய்வ அனுக்கிரஹமே. மாயையிலிருந்து விடுபட மாயை கலப்பில்லாத தெய்வத்தின் துணை தேவை. தெய்வத்தின் க்ருபையின்றி, ஒருக்காலும் மாயையிலிருந்து விடுபட முடியாது.

**அறிவிப்பு**

மதுரமுரளி இதழில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கட்டண விபரம்** (5 வரிகள் / 40 வார்த்தைகள்)

¼ Page Size Rs. 2000/-

விளம்பரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

''மதுரமுரளி'', குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,

24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

✆ 044-23710110

# வழிபாடு

நம்முடைய சர்வ சாஸ்திரங்களின் சாரம் ஆத்மசாக்ஷாத் காரத்தை அடைவதே. வேதம் அனாதியானது - எத்தனையோ விதமான ஆராய்ச்சிகள், வேதத்தின் காலகட்டத்தை நிர்ணயிக்க முயன்றும், ஒருமித்த கருத்தை அடைய முடியவில்லை. வேதத்தை அனுசரித்து வராதவர்கள் கூட வேதத்தை அனாதி (காலவரம்புக் கப்பாற்பட்டது) என்று ஒப்புக்கொள்கின்றனர். வேதம் பகவானுடைய மூச்சுக் காற்றாகவே இருக்கிறது. கோழி இல்லை என்றால் முட்டை இல்லை. முட்டை இல்லையென்றால் கோழி இல்லை. கோழியையோ, முட்டையையோ முதலில் படைத்தவன் ஒருவன் இருக்கவேண்டும். அவன்தான் இறைவன்.

உலகத்தில் பல கடவுள்கள் இருக்க முடியாது. ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு பிரத்யேகமான கடவுள் இருக்க முடியாது. ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு பிரத்யேகமான கடவுள் இருக்க முடியாது. ஒவ்வொரு ஊருக்கும் ஒரு பிரத்யேகமான கடவுள் இருக்க முடியாது. ஒவ்வொரு இனத்திற்கும் ஒரு பிரத்யேகமான கடவுள் இருக்க முடியாது. ஒவ்வொரு ஜாதிக்கும் ஒரு பிரத்யேகமான கடவுள் இருக்க முடியாது.

எல்லா மதங்களுக்கும், எல்லா ஊர்களுக்கும், அனைத்து இனத்தவர்க்கும், எல்லா ஜாதியினர்க்கும் கடவுள் ஒருவரே. கடவுள் சர்வ சக்தராய் இருப்பதால், நாம் எந்தவிதமான ரூபத்தில் வழி பட்டாலும், எந்தெந்த நாமங்கள் சொல்லி அழைத்தாலும் நம்முடைய வழிபாடுகள் ஒருவராக இருக்கும் அவரையே சென்றடைகின்றன. பக்தி, சிரத்தை, மரியாதை இவையெல்லாம் மனத்தளவில் இருந்தால் போதும்; வெளி விஷயங்களில் தேவையில்லை என்று பலர் நினைத்தும், பேசியும் வருகின்றனர். இவர்கள் நெற்றிக்குத் திலகமிட்டுக் கொள்வதையோ, கழுத்தில் ஜபமாலை அணிந்து கொள்வதையோ, பிரதட்சிணம் செய்வதையோ, நமஸ்கரிப்பதையோ, பூஜை செய்வதையோ, இறைவனுக்கோ சாதுக்களுக்கோ தொண்டு செய்வதையோ, தேவையற்ற சடங்குகள் என்று கூறுவார்கள். இவையெல்லாம் செய்தால்தான் பக்தியா என்று பரிகசிப்பார்கள்.

ஆனால், நடைமுறை வாழ்க்கையில், தங்களுடைய குழந்தைகளுக்குச் சீருடைகள் அணிவித்து பள்ளிக்கு அனுப்புகின்றனர். சீருடையில் சென்றால்தான் படிப்பு வருமா என்று அவர்கள் கேள்வி கேட்பதில்லை. மேலதிகாரி வந்தால், மரியாதை மனத்தளவில் இருந்தால் போதுமென்று இருக்காமல், நாற்காலியை விட்டு அலறி அடித்துக்கொண்டு எழுந்து நிற்கிறார்கள். சிநேகிதர்களைப் பார்த்தால் நட்பு மனத்தளவில் இருந்தால் போதுமென்று நினைக்காமல், கைகளைக் குலுக்கி நட்பை வெளிப்படுத்துகின்றனர். யார் வீட்டிற்காவது சென்றால், அவர்கள் இவரை முகம் மலர அழைக்காவிட்டால், அன்பு மனத்தளவில் இருந்தால் போதுமென்று நினைக்காமல், கோபித்துக்கொள்கிறார். வெளியூருக்குச் சென்று வருபவர் தன் அன்பை வெளிப்படுத்த, குழந்தைகளுக்கும், மனைவிக்கும், நண்பர்களுக்கும் ஏதாவது பொருள்களை வாங்கி அன்பாக அளிக்கிறார். இவையெல்லாம் வாங்கி வந்தால்தான் அன்பாகுமா என்பதை அவன் யோசிப்பதில்லை. தனக்கு ஏதாவது துக்கம் ஏற்பட்டாலோ, உடல் நிலை பாதிக்கப்பட்டாலோ என்னைச் சார்ந்தவர் தன்னை விசாரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அவர்கள் விசாரித்தால் தன்னுடைய துக்கமோ, நோயோ குறையப்போகிறதா என்று அவர் யோசிப்பதில்லை. நாம் துயரமாக இருக்கும் சமயத்தில், நம்மைச் சார்ந்தவர்கள் சந்தோஷமாக இருப்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இதன் மூலம் நாம் அறிவது என்னவென்றால், உலக விஷயங்களில் நம்முடைய அன்பையும், நட்பையும், ஒழுக்கத்தையும், சுகத்தையும், துக்கத்தையும், நம்மை அறியாமலேயே, பல செயல்களின் மூலம் வெளிப்படுத்துகின்றோம். அதுபோல், பிறர் செய்யவேண்டுமென்றும் எதிர்பார்க்கிறோம். ஆகவே, உண்மையில் தெய்வீக விஷயங்களில், சிரத்தை, பக்தி, மரியாதை எல்லாம் மனத்தளவில் இருந்தால் போதும் என்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். சர்வ வல்லமை வாய்ந்த ஒருவராக இருக்கும் கடவுளை பல கோயில்கள் கட்டி, சிலைகளில் வழிபட வேண்டிய அவசியம் என்ன? ஒரு நாமமும், ஒரு ரூபமும் இல்லாத அகண்டமான ஒரு வஸ்துதான் கருணையினால் பல நாம ரூபங்களைத் தரித்துள்ளது. ரிஷி என்ற சப்தத்திற்கே, மந்திரத்தை நேரில் பார்த்தவரென்று பொருள். மந்திரத்தை நேரில் பார்த்தவரென்றால், மந்திர ஸ்வரூபமான தெய்வத்தை நேரில் பார்த்தவரென்று பொருள்.

ஒரு பொம்மைக் கோழியைப் பார்த்தால், எவ்வாறு நிஜமான கோழியும், ஒரு பொம்மை மாட்டைப் பார்த்தால், எவ்வாறு நிஜமான மாடும் நினைவிற்கு வருகின்றதோ, அதுபோல மகர்ஷிகள் தங்களுடைய தபோ பலத்தால் சாக்ஷாத்காரம் செய்த தெய்வங்களின் உருவங்கள்தான், நாம் இன்று கோயிலில் வழிபடும் உருவங்கள்.

சூரிய வெப்பம் எல்லா இடங்களிலும் வியாபித்திருந்தாலும், ஒரு பூதக் கண்ணாடியின் வழியாக செலுத்தும்போது, அதன் உஷ்ணத்தின் வீர்யம் அதிகமாவது போல, மகரிஷிகள் வருங்கால சந்ததியினரின் க்ஷேமத்தை உத்தேசித்து, எங்கும் வியாபித்திருக்கும் தெய்வ சாந்நித்யத்தை தன் தபோ வலிமையால் கோயில்களில் பிரதிஷ்டை செய்துள்ளனர். நம்மால் அப்படிப்பட்ட சாந்நித்யத்தைத் திரும்பவும் உண்டாக்க முடியாவிட்டாலும் கூட, சிரத்தையுடன் கூடிய வழிபாடுகளால் அதை அணையாமல் காப்பாற்றி, நாமும் க்ஷேமத்தையடையச் செய்வோமாக. நாம் கோயிலுக்குச் செல்லும் போது நாம் தெய்வத்தைப் பார்க்கிறோமோ இல்லையோ, தெய்வம் நம்மைப் பார்க்குமல்லவா? அதுவே, நமக்கு நன்மையை உண்டு பண்ணும்.

கோயில்களில் இப்படி எழுந்தருளியுள்ள அர்ச்சாவதாரங்களிடம் காட்டும் மரியாதை, சிரத்தை, பக்தி எல்லாம் எப்படி தெய்வத்திற்குச் செய்ததாக ஆகும்? அவற்றிடம் காட்டும் அலட்சியம் எப்படி தெய்வ குற்றமாக ஆகும்? கோயில்களில் தெய்வமாக நிற்கும் சிலைகள் எல்லாம் ஏதோ ஒரு காலக்கட்டத்தில் உருவானவைதானே? அவைகளும் கல்தானே? வீதி ஓரத்தில் இருக்கும் கற்களுக்கும், மலைகளில் இருக்கும் கற்களுக்கும், கோயில்களில் தெய்வங்களாக இருக்கும் கற்களுக்கும் என்ன வித்தியாசம்? என்று கேட்கலாம்.

ஆதி சங்கரர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்ரீ ரமண மகரிஷிகள் போன்றவர்களும் மனிதர்கள்தான். நாமும் மனிதர்களே. அவர்களுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா? அவர்களும் மனிதகுலத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், மனித குலம் அவர்களைப் பூஜித்துத் தலை வணங்குகிறது. இதற்குக் காரணம் அவர்களிடமிருந்த தெய்வ வெளிப்பாடே. அதுபோல், கோயில்களில் உள்ள கற்களில் தெய்வ சாந்நித்யம் என்ற நெருப்பு உள்ளது. இந்த சக்தியால் உலகைக் காக்கவும், அழிக்கவும் முடியும். ஆகவே, அதற்கு நாம் தலை வணங்கியே ஆகவேண்டும். சமுதாயத்திலும்,

அரசியலிலும், தனக்குப் பிடித்த தலைவர்களின் படங்களுக்கும், சிலைகளுக்கும் மாலைகள் அணிவித்து மரியாதை செய்து, அதைத் தங்களுடைய தலைவர்களுக்கே செய்த மரியாதையாக நினைத்து சந்தோஷப்படுகின்றனர். தலைவர்களும் தம்முடைய படங்களுக்கும், சிலைகளுக்கும், காட்டும் மரியாதையைத் தனக்கே காட்டியதாக எண்ணி மகிழ்கின்றனர். தேசியச் சின்னங்களுக்குக் காட்டப்பட்ட மரியாதையும் அவமரியாதையும் தேசத்துக்கே செய்யப்பட்ட மரியாதையாகவும் அவமரியாதையாகவும் கருதப்படுகின்றன. இவைகள் போலவே சர்வ வியாபியும், சர்வ சக்தனுமான இறைவனின் சிலைகளுக்குக் காட்டப்படும் மரியாதை இறைவனுக்கேக் காட்டப்படுவதாகும். அவ்வாறே, சிலைகளுக்குச் செய்யப்படும் அவமரியாதை இறைவனுக்கே செய்யப்பட்டதாகும்.

ஆகவே, நாம் நம்மால் இயன்ற வழிகளிலெல்லாம், புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை செய்து, இறைவனை வழிபட்டு இறையருளுக்குப் பாத்திரமாக வேண்டும். நம்முடைய மதத்தில், பல கடவுள்கள் இருப்பதாக சொல்லி நம்மில் பலருமே பரிகசிப்பதுண்டு. ஒவ்வொன்றிலும் ஆழ்ந்து சென்று உண்மையை புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டுமேயொழிய, மேலெழுந்தவாரியாக பார்த்துவிட்டோ, தனக்குத் தோன்றுவதே சரியென்று பேசுவதோ சரியான வாதமாகாது. உலகத்தை உண்மையாக துறந்துவிட்டு, பலகாலம் மனதையடக்கி, தவத்தின் பயனாக மகரிஷிகள் கண்டறிந்த விஷயங்களில் ஏதோ பொருள் இருக்கத்தான் வேண்டும். அதை மேலெழுந்தவாரியாகப் பார்த்துவிட்டு எதுவும் பேசுதல் கூடாது.

உலகம் இயற்கையிலேயே பலவிதமான மிருகங்கள், மரங்கள், செடிகள், பட்சிகள், மொழிகள் போன்றவைகளைக் கொண்டது. மனித இனத்திலேயே கோடானுகோடி மக்களுள்ளனர். இத்தனை பேரிலும், ஒருவருடைய உடலமைப்பு போல, மற்றவருடைய உடலமைப்பு இல்லை. ஒருவருடைய பேச்சைப் போலவோ, நடையைப் போலவோ, மற்றவரின் பேச்சோ, நடையோ அமைவது இல்லை. ரசனையும் நபருக்கு நபர் வித்தியாசப்படுகிறது. ஒருவருக்குப் பிடித்த கதை மற்றவருக்குப் பிடிப்பதில்லை. இதுபோலவே, எல்லா விஷயங்களிலும் சொல்லிக்கொண்டு போகலாம். உணவு, உடை, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், மனோபாவம் எல்லாவற்றிலும் அனைவரும் ஒத்திருப்பதில்லை.

ஒருவருக்கு நன்மை எனப்படுவது, மற்றவருக்கு நன்மை இல்லாமல் தோன்றுகிறது. சிலருக்கு இட்லி பிடிக்கின்றது. சிலருக்கு சப்பாத்தி பிடிக்கின்றது. சிலருக்கு தோசை பிடிக்கின்றது. இவ்வாறு உணவிலும் பலவிதம், இட்லி பிடிப்பவர்களிலேயே, ஒரு சாராருக்கு இட்லியுடன் சட்னி தொட்டுக் கொள்ளப் பிடிக்கிறது. மற்றோர் சாராருக்கு இட்லிக்குத் தொட்டுக் கொள்ள சாம்பார் தேவைப்படுகிறது அல்லவா? இதுபோல பல வேறுபாடுகளை உடையது மனிதனின் மனம். இவற்றை மாற்றுவது கடினம். ஆகவே, இப்பேர்ப்பட்ட வேறுபாடுகளை வைத்துக்கொண்டே வேற்றுமையில்லாத வஸ்துவான இறைவனை அடையவேண்டும். இப்படியாக, மனித மனம் இருக்கும்போது, எல்லோருக்கும் ஒரே கடவுள் என்பதையோ, ஒரே மார்க்கம் என்பதையோ உபதேசித்தோமானால், மக்களிடம் ஈடுபாட்டை உண்டாக்க முடியாது. ஆகவே, மனிதனால் தன்னுடைய மனோபாவத்தை மாற்றிக்கொண்டு, பரந்த நிலையில் சென்று அகண்ட வஸ்துவான சிந்திக்க முடியாது.

தெய்வம் சர்வ சக்தனாக இருப்பதால், மனிதனுடைய நிலைக்குக் கீழே இறங்கி வருகிறான். சத்தியம், தர்மம் இந்த விதமான மனோபாவம் உள்ளவனுக்காக ராமனாகவும், லீலைகளை ரசிப்பவனுக்கு கிருஷ்ணனாகவும், பிரம்மச்சரியத்திலும், வினயத்திலும், பக்தியிலும், தொண்டிலும் ஈடுபாடு கொண்டுள்ள மனிதனுக்கு அனுமானாகவும், மாத்ரு பக்தியுள்ளம் கொண்டுள்ளவனுக்கு தேவியாகவும் ஆகியுள்ளான். அவரவருடைய மனோபாவ ரீதியிலேயே அந்தந்த தெய்வங்களை வழிபட்டு, அகண்டமான சச்சிதானந்த ஸ்வரூபத்தை அடைவதாக வகுக்கப்பட்டுள்ளது. ஒருவனுக்கு திருட வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. நாட்டின் சட்டம் கடுமையாக இருப்பதால், பயந்து கொண்டு திருடாமல் இருக்கிறான். இவனுடைய மனதில் திருட்டு எண்ணம் இருக்கும் வரை இவன் நல்லவனாக மாட்டான். ஆகவே, சட்டம் இவனைத் திருத்தவில்லை. அச்சுறுத்தித்தான் வைக்கிறது. சட்டத்தையும் ஏமாற்றி, அவன் திருட முயற்சித்துக் கொண்டுதான் இருப்பான். ஆகவே, மனத்தளவில் மாற்றம் வராத வரையில், அதை ஒரு மாற்றமாக ஏற்க முடியாது. அப்படி வந்த மாற்றமும் நிலையாக இருக்கும் என்று கூற முடியாது.

சிலர், தெய்வம் அவனவன் செய்யும் தவறுக்கு ஏன் உடனே தண்டனை கொடுப்பதில்லை என்று கேட்பதுண்டு. அதாவது,

அவர்கள் கட்சிப்படி திருடுபவனுக்கு உடனே கை போக வேண்டும். கண்களால் தவறிழைப்பவன் உடனே குருடாக வேண்டும் என்பது வாதம். இறைவன் ஏன் அப்படி செய்யவில்லையென்றால் மனதில் மாற்றம் ஏற்படாமல் சரீரத்தில் ஏற்படும் தண்டனை ஒன்றும் பயனளிக்காது. கடவுள் கருணை உள்ளவன். ஆகவேதான், நாம் திருந்த வேண்டும் என்பதற்காக நம்முடைய எல்லாக் குற்றங்களையும் சகித்துக் கொள்கிறான். பூர்ணமான பக்தி உள்ள ஒருவனால், கோவிலிலுள்ள சிலைகளை ஒருக்காலும் உலோகம் என்றோ, கல் என்றோ சிந்திக்கக் கூட முடியாது.

கோயில்களில் பூஜா விதிகள், க்ஷேத்திரத்திற்கு க்ஷேத்திரம், தெய்வத்திற்கு தெய்வம் வித்தியாசப்படுகிறதைப் பார்க்கின்றோம். இதில் எந்த பூஜா விதியின்படி பூஜை செய்தால், இறைவனுக்கு உவப்பாக இருக்கும் என்ற ஐயம் தோன்றலாம். இதில் எல்லாமே சரிதான். எப்படியென்றால், ஒரு தாய், சிறு வயதிலிருந்தே ஒரு குழந்தைக்கு உணவு பழக்கம் உட்பட எந்த விதமான வழக்கங்களை பழக்குகிறாளோ, அது போலவே அக்குழந்தை கடைசிவரை அந்த பழக்கத்தில் நிற்கின்றது அல்லவா? அதுபோல மஹாத்மாக்களால் எந்தெந்த ஸ்வாமி ஆராதிக்கப்படுகிறதோ, அவர்கள் எந்த பூஜா விதிகளை ஏற்படுத்தி பூஜை செய்து வந்தார்களோ அந்த பூஜா விதிகளுக்கு தெய்வம் பழக்கப்பட்டுவிட்டதால் அந்த விதமான பூஜா விதிகளால் விடாமல் பூஜை செய்து வரவேண்டும். இதுதான் பலவிதமான பூஜா விதிகள் ஏற்பட்டதற்கான காரணம். தேவர்கள், கின்னரர்கள், சித்த புருஷர்கள் போன்றோர் இன்னும் அம்மகான்களால் ஏற்படுத்தப்பட்ட கோயில்களுக்கு மலர் போன்ற உபகரணங்களால் வழிபாடு செய்கின்றனர். இது நம் கண்களுக்குத் தெரியாவிட்டாலும் மஹான்களுக்கு பிரத்யக்ஷம். ஆகவே, அத்தலங்களிலே தெய்வீக சாந்நித்யம் குறைவதில்லை. ஆகம சாஸ்த்திரங்கள் கோவில்களைக் கட்டுவதற்காக பலவிதமான விதிகளை வகுத்திருக்கின்றன. அவ்வாறு அமைந்திருக்கும் ராஜ கோபுரம் போன்ற கோயில்களின் அமைப்பை தூரத்திலிருந்து பார்த்தால் கூட மக்களுக்கு நிறைவு ஏற்படுகிறது. இத்தத்துவத்தைப் புரிந்து கொண்டு இவ்வாறு நிறுவப்பட்டிருக்கும் கோயில்களின் பூஜா விதிகளை சரியாக அனுஷ்டித்து வழிபாடு செய்தால் மக்கள் மனப் பக்குவம் பெற்று உயர்ந்த இலட்சியத்தை அடைய இயலும்.

(தொடரும்)